
இதில் + குறியிட்டு, கிடைத்த 4 பங்கில், எதிர் எதிரில் உள்ள 2 பாகங்களை நீக்கி விட வேண்டும். பின்பு, மீண்டும் வட்ட வடிவில் பரப்பி + குறியிட்டு பகுத்து பிரித்து கடைசியில் அரை கிலோ வரும் வரை திரும்ப திரும்ப மேற்கண்டவாறு செய்து மண்ணின் அளவைக் குறைக்க வேண்டும்.




7. இதை உலர்ந்த பாலிதீன் பை அல்லது துணிப் பையில் இட்டு, கீழ்க்கண்ட விவரங்களை ஒரு பேப்பரில் குறித்து சேகரித்த மண் மாதிரியுடன் சேர்த்து ஆய்வுக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும்.




**மண் மாதிரியுடன் அனுப்ப வேண்டிய விவரங்கள் :**

1. பெயர் மற்றும் முகவரி
2. நிலத்து பெயர் / சர்வே எண்
3. பயிரிடப்போகும் பயிர் / இரகம்
4. பாசன வசதி / இறவை / மானாவாரி
5. களர், உவர் பிரச்சனை (இருப்பின்)

**உரங்களில் உள்ள சத்துக்கள் :**

1. யூரியா – 46% தழைச்சத்து.
2. சூப்பர் பாஸ்ஃபேட் – 16% மணிச்சத்து.
3. பொட்டாஷ் (MOP) – 60% சாம்பல்சத்து.
4. டி.ஏ.பி – 18% தழைச்சத்து & 46% மணிச்சத்து.

- 50 கிலோ தழைச்சத்து அளிக்க 108.50 கிலோ யூரியா இட வேண்டும்.
- 50 கிலோ மணிச்சத்து அளிக்க 312.50 கிலோ சிங்கிள் சூப்பர் பாஸ்ஃபேட் இட வேண்டும்.
- 50 கிலோ சாம்பல் சத்து அளிக்க 83.50 கிலோ பொட்டாஷ் இட வேண்டும்.

**Compiled by :**


Mr. K.குணசேகர்,
தொழில்நுட்ப வல்லுநர் (மண்ணியல்)

Dr. T.சுந்தர்ராஜ்,
முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்





மேலும் விவரங்களுக்கு

**ICAR - வேளாண்மை அறிவியல் மையம்**

எலுமிச்சங்கிரி, மல்லிநாயனப்பள்ளி அஞ்சல்,
Ph : (04343) - 296039, 080982 80123
Email : kvk.krishnagiri@icar.gov.in
drperumalkvk@gmail.com


# மண் பரிசோதனைக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறை








**ICAR - KRISHI VIGYAN KENDRA**

Elumichangiri, Mallinayanapalli Post,
Krishnagiri District, Tamil Nadu - 635 120.
Tel : 04343 - 296039, 080982 80123
www.krishnagirikvk.org
Email : kvk.krishnagiri@icar.gov.in

## மண் பரிசோதனைக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறை

பயிரின் மகத்தான மகசூலுக்குத் தேவையான காரணிகளில் முக்கியமான ஒன்று மண்ணும் அதிலிருந்து பயிருக்குக் கிடைக்கக்கூடிய சத்துக்களின் அளவும் ஆகும். இதனை அறிவதற்கு மண் பரிசோதனை மிக அவசியமாகிறது.

மண் பரிசோதனையின் மூலம் மண்ணிலுள்ள பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் அளவு தெரிவதோடு மண்ணின் தரமும் அறியப்படுகிறது. மண்ணில் வேறு ஏதாவது பிரச்சனைகள் (களர், உவர் தன்மை போன்றவை) இருப்பின் அதுவும் உடனடியாகத் தெரிந்து விடுவதால் அம்மண்ணை சீர்திருத்துவதற்கும் ஏதுவாகிறது. பிரச்சனைகளற்ற நிலத்தாலும், உர சிபாரிசின்படி உரமிடுவதாலும், மகசூல் பெருகுவதோடு மண்ணின் தரமும் பாதுகாக்கப்படுகிறது.


நிலத்திற்கு நிலம் மண்ணிலுள்ள சத்துக்களின் அளவுகள் மாறுபடுவதால், மண் பரிசோதனையின் உதவி கொண்டு மட்டுமே பயிருக்குத் தேவையான, சரியான உர சிபாரிசை வழங்க முடியும். சரியான உர சிபாரிசின்படி உரமிட்டால், கணிசமான அளவிற்கு உரச் செலவை குறைக்க முடியும்.

### மண்மாதிரி எடுக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவைகள் :

1. பயிர் அறுவடை முடிந்த பிறகு, அடுத்தப் பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன் அல்லது உரமிட்ட 3 மாதத்திற்குப் பிறகு மண் மாதிரி எடுக்க வேண்டும்.
2. தற்போது சாகுபடியில் உள்ள நிலங்களில் மண்ணில் உள்ள பிரச்சனைகளை அறிய மண் மாதிரி சேகரிக்க வேண்டியிருந்தால் பயிர் வரிசையின் நடுவே மாதிரிகள் சேகரிக்க வேண்டும்.
3. நிலத்தில் மணற்பாங்கான பகுதி, கரிசல் மண் பகுதி, செம்மண் பகுதி ஆகியவற்றிற்குத் தனித்தனியே மண் மாதிரி எடுக்க வேண்டும்.
4. நிலத்தின் மேடான பகுதிக்குத் தனியாகவும், தாழ்வான பகுதிக்குத் தனியாகவும், மண் மாதிரி எடுக்க வேண்டும்.
5. ஒரே வயலில் முன்பு சாகுபடி செய்த பயிர் வேறு வேறாக இருந்தால் அதற்கேற்ப தனித்தனியே மண் மாதிரி எடுக்க வேண்டும்.
6. எரு குவித்த இடங்கள், வரப்பு ஓரங்கள், மரங்களின் நிழல் படரும் பகுதிகள், நீர் கசிவு உள்ள இடங்கள் ஆகிய இடங்களில் மாதிரிகள் சேகரம் செய்யக்கூடாது.

### மண் மாதிரி எடுக்கும் முறை


1. மண் மாதிரிகள் சேகரிக்கும் போது அவை மொத்த நிலத்தின் தன்மையை குறிப்பிடும்படி அமைய வேண்டும். இதற்கு ஒரே மாதிரியாகத் தோன்றும் நிலத்தின் பகுதிகளை ஒரு பாகமாக குறித்துக் கொண்டு அதிலிருந்து குறுக்கு நெடுக்காக நடந்து 10 முதல் 15 மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும்.



2. மண் மாதிரி எடுக்க வேண்டிய இடத்திலுள்ள இலை, சருகு, புல் முதலியவற்றை மேல் மண்ணை நீக்காமல் அப்புறப்படுத்த வேண்டும்.
3. சாகுபடி செய்யும் பயிரைப் பொறுத்து கீழ்க்கண்ட ஆழத்திற்கு "V" வடிவத்தில் (மண் வெட்டியினால்) குழி வெட்டி அந்த மண்ணை அப்புறப்படுத்த வேண்டும்.
   - நெல், ராகி, கம்பு, கடலை, போன்ற குட்டை வேர் பயிர்களுக்கு 18 செ.மீ. அல்லது 6 அங்குலம் (1/2 அடி ).
   - பருத்தி, கம்பு, மிளகாய், வாழை, மரவள்ளி போன்ற ஆழமான வேர் பயிர்களுக்கு 22 செ.மீ. அல்லது 9 அங்குலம் (3/4 அடி) .
   - திராட்சை, மா, தென்னை போன்ற பழத்தோட்ட மற்றும் மரப் பயிர்களுக்கு மூன்றடி ஆழமுள்ள குழிதோண்டி அதன் முதல் அடியிலே ஒரு மண் மாதிரியும், இரண்டாம் அடியில் ஒரு மண் மாதிரியும், மூன்றாவது அடியில் ஒரு மண் மாதிரியுமாக மூன்று மண் மாதிரிகளைத் தனித்தனியே எடுக்க வேண்டும்.



4. வெட்டிய "V" வடிவ குழியின் ஓரமாக மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் இரண்டு புறமும் ஒரே சீராக மண் வெட்டியினால் ஒரு அங்குல கனத்திற்கு மண்ணை வெட்டி எடுத்து ஒரு சுத்தமான வாளியில் போட வேண்டும்.






5. ஒரு வயலில் இதுபோல் குறைந்தது 10 முதல் 15 இடங்களில் மண்ணை சேகரித்து, ஒன்றாக கலந்து வேர், தண்டு, கல் போன்றவற்றை அப்புறப்படுத்த வேண்டும். மண் ஈரமாக இருந்தால் நிழலில் உலர்த்த வேண்டும்.



6. இவ்வாறு சேகரம் செய்யப்பட்ட மண்ணை சுத்தமான தரையில் அல்லது பேப்பர் போன்ற விரிப்பின் மேல் சமமாக வட்ட வடிவில் பரப்பவும்.